JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-4   Witness
for Prosecution

CC. No. 35/2019   Crime No. 56/2029   Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | **PW-4-அய்யாசாமி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025 | | | |

**எதிரிகள் ஆஜர் இல்லை.**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் உள்ள போலீஸ்காரர்கள் இருவரும் எனது உறவினர் என்றால், சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 15 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால், சரியல்ல. சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மூர்த்தி என்பவர் எனக்கு யார் என்றே தெரியாது என்றால், சரிதான். சம்பவயிடத்தில் ஆவணங்கள் கைப்பற்றும்போதும் சம்பவயிடத்தில் ஆவணங்கள் கைப்பற்றும்போது சம்பவயிடத்தில் போலீசார் தனிப்பட்ட நபர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. மூர்த்தி என்பவரை விசாரித்தார்கள். நான் சம்பவயிடத்தில் வைத்து கை சரியல்லயெழுத்து செய்யவில்லை,போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.14 18:15:41 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

CC. No. 35/2019 Crime No. 56/2029 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3-அய்யம்மாள் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025 | | | |

**எதிரிகள் ஆஜர் இல்லை.**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும். எனக்கும் பாத்தியப்பட்ட கிணறு மற்றும் மோட்டார் பொதுவாக இருவருக்கும் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி கிணறு மற்றும் மோட்டாரை ஆளுக்கு ஒரு நாள் பயன்படுத்தி வருகிறோம் என்றால், சரிதான். சம்பவம் நடந்த உடனே பவானி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து பவானி காவல் நிலையத்திலிருந்து போலீசார் உடனே அங்கு வந்து விட்டார்கள் என்றால், சரிதான். சம்பவயிடத்திலேயே போலீசார் எனது மகனிடம் சம்பவம் குறித்து எழுதி வாங்கி விட்டார்கள் என்றால், சரிதான். சம்பவயிடத்திலிருந்த கட்டிங் பிளேடு, ஒயர் மற்றும் கல் அனைத்தும் நான்தான் போலீசாருக்கு அடையாளம் காட்டி எடுத்துக் கொடுத்தேன் என்றால், சரிதான். மோகன் என்பவர் மோட்டார் ரூமை எட்டி உதைத்த சங்கதியை நான் எனது போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால், சரியல்ல. நான் அனைத்தையும் கூறினேன்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டினார் என்று போலீசாரிடம் நான் கூறவில்லை என்றால், சரியல்ல. நான் போலீசாரிடம் கூறினேன். மேற்படி ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் கிணறு மற்றும் மோட்டார் குறித்து பவானி காவல் நிலையத்தில் நிறைய முறை சமரசம் பேசப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.14 18:15:53 +0530

மோகன் என்பவருக்கு கிணறு மற்றும் மோட்டார் அனைத்திலும் பாத்தியம் உள்ளது என்றாலும், நான் தான் எதிரிகளிடம் பிரச்சனை செய்தேன் என்றாலும், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவமானது என்னாலும் மற்றும் எனது மகனாலும் உருவாக்கப்பட்டது என்றால், சரியல்ல. சம்பவம் உண்மையாகவே நடந்தது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.14 18:16:00 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.